1975 அக்டோபர் 24]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) இல்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி : சார், சில மலைப் பிரதேசங்களில் விளைகின்ற பழங்கள் பிரபலமானவை. அந்தப் பழங்கள் எல்லாம் இப்பொழுது காய்ந்து விட்டன. சர்க்காருக்குப் போதுமான மருந்துகளைக் கண்டுபிடித்துக் கொடுக்கக்கூடிய சாமர்த்தியமும் கிடையாது. ஆகவே, பழங்களை அபிவிருத்தி பண்ணக்கூடிய முறையிலே கொடைக்கானல், ஊட்டி போன்ற பிரதேசங்களில் பழ அபிவிருத்திக்கு சர்க்கார் முயற்சிக்காவிட்டாலும், தனிப்பட்ட ஆட்கள் முன்வந்தால், அவர்களுக்கு அதைக் கொடுக்க சர்க்காருக்கு என்ன தயக்கம் என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, பழம் விளைகின்ற பகுதிகளைத் தனிப்பட்டவர்களுக்குக் குத்தகைக்கு விடுகின்ற செயற்குறிப்பு தற்பொழுதில்லை. 1951-வது ஆண்டில் திரு. கே. எம். எஸ். கோவிந்தசாமி பிள்ளை என்பவருக்கு 110 ஏக்கர் நிலம் பழ மரங்கள் வைத்துக்கொள்ள குத்தகைக்கு விடப்பட்டது. அதற்குப் பின்னாலே யாருக்கும் விடப்படவில்லை. தனிப்பட்டவர்களுக்கு விடுகின்ற செயற்குறிப்பு தற்பொழுது இல்லை.

வரதராசப்பெருமாள் கோயில்

*43 வினா—**திரு. ஜி. சாமசாமி :** மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், அக்ரகாரம் வரதராசப் பெருமாள் கோயிலுக்கு மானியம் வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) & (இ) வட ஆற்காடு மாவட்டம், அக்ரகாரம் அருள்திரு வரதராசப்பெருமாள் திருக்கோயில் திருப்பணிச் செலவிற்கு, ஆணையர் பொது நல நிதியிலிருந்து ரூ. 5,000 13—5—1975 அன்று வழங்கப்பட்டுள்ளது.

திருமதி த. ந. அனந்தநாயகி : சாதாரணமாகக் கோயில்களில் திருப்பணிகள் எத்தனை ஆண்டுகளுக்கு ஒருமுறை செய்கிறார்கள்? கும்பாபிஷேகம் எத்தனை ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்பட வேண்டுமென்ற திட்டம் இருக்கிறதா? அவரவர்கள் விருப்பத்திற் கேற்றவாறு நடத்துகிறார்களா என்று . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு குறிப்பிட்ட கோயிலுக்கு மானியம் வழங்குவதைப் பற்றிய கேள்வி இது. அறநிலையம் என்று சொன்னவுடனே, திருப்பணி எத்தனை ஆண்டுகளுக்கு ஒரு முறை, கும்பாபிஷேகம் எப்பொழுது என்றெல்லாம் . . .

திருமதி த. ந. அனந்தநாயகி : கோயில் திருப்பணிக்கு மானியம் வழங்கியிருக்கிறார்கள். அதற்கு முன்னாலே அப்படி நடந்திருக் கிறார்களா, திட்டம் இருக்கிறதா என்றெல்லாம் கேட்கிறோம் . . .

(விடை இல்லை)

திரு. என். கே. பழனிசாமி : வழக்கமாகப் பொது நிதியிலிருந்து கோயில்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. இந்த ஒரு சம்பவத்தை வைத்து எல்லா இடங்களிலும் இந்தமாதிரி கோயில் மோசமாக எங்கெங்கு இருக்கிறதோ, அங்கங்கு அந்தந்த யூனியன் பொது நிதியிலிருந்து அளிக்க சர்க்கார் ரூல்ஸை ரிலாக்ஸ் பண்ணு வார்களா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, பஞ்சாயத்து யூனியன் நிதியிலிருந்து கோயில்கள் திருப்பணிக்காக வழங்கப்படுவதாகத் தெரியவில்லை; கிராமங்களுடைய அபிவிருத்திக் காகத்தான் செலவு செய்கிறார்கள். அறநிலையத் துறையினுடைய ஆணையர் தனக்கென்று பொது நிதி ஏற்படுத்தியிருக்கிறார். அந்த நிதியிலிருந்துதான் வழங்கப்படுகிறது.

திரு. பெ. சீனிவாசன் : இந்த பெயர் பெரிதாக இருக்கிறது— அக்ரகாரம் அருள்திரு வரதராசப்பெருமாள் திருக்கோயில் திருப்பணிச் செலவிற்கு ஆணையர் பொது நிதியிலிருந்து கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் என் ஏற்பட்டது? அந்த ஆண்டவர் நஷ்டத்தில் என் வாழ்க்கையை நடத்துகிறார்? அந்தக் கோயிலில் உண்டியல் வருமானம் இல்லையா? என்ன காரணத்தினால் ஆணையர் பொது நிதியிலிருந்து தரப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, குறிப்பிட்ட சாமி மட்டுமல்ல, அதிக வருமானம் வரக்கூடிய கோயில்களிலிருந்து நிதி பெற்று, பொதுநிதியில் வைத்துக் கொண்டு, நிதி வசதிக் குறைவாக உள்ள கோயில்களுக்கு வழங்கு கிறோம். அந்த அடிப்படையிலேதான் இதை வழங்கியிருக்கிறோம்.

சாணவாயு நிலையங்கள்

44 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்:
திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை:
திரு. என். கே. பழனிசாமி: மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சாணவாயு நிலையம் துவக்கும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: இதுவரை சுமார் 384 சாண எரிவாயுச் சாதனங்கள் நிறுவப்பட்டுள்ளன. மேலும் இதற் கிணையான அளவு சாண எரிவாயுச் சாதனங்கள் நிறுவும் வேலை பல்வேறு கட்டங்களில் இருக்கின்றன. 1975-76-ம் ஆண்டு முடிவுக்குள் 2,000 சாண எரிவாயுச் சாதனங்கள் அமைத்திட முடியும் எனக் கருதப்படுகின்றது.

திரு. என். கே. பழனிசாமி: சார், இந்த கோபர் காஸ் பிளாண்டாலே கிடைக்கிற காஸைக் கொண்டு, மின்சார உபயோகத்தைக் குறைக்க முடியும் என்றும் அனாவசியமானச் செலவைக் குறைக்க முடியும் என்றும் சொல்கிறார்கள். ஆகவே, இது எந்த எந்த வழிகளிலே பிரயோஜனப்படுகிறது என்பதை அமைச்சரவர்கள் சொல்வார்களா? எந்த எந்தப் பிரதேசத்திலே விஸ்தரிக்க சர்க்கார் திட்டமிட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, எண்ணெய் மற்றும் உரத் தட்டுப்பாட்டைச் சமாளிக்க வேண்டு மென்று மத்திய திட்டக் குழு இப்படிப்பட்ட ஒரு சாண எரி வாயுப் பொருளை நாடு பூராவும் ஏற்படுத்த வேண்டுமென்று முடிவெடுத்தார்கள். அதற்கு மத்திய அரசாங்கத்திலிருந்து 25 சத விகிதம் மானியம் வழங்குகிறார்கள். பொதுவாக, மற்ற எரி பொருள்களை விறைக்குவதற்குப் பதில் இந்தச் சாண எரி வாயு மூலமாக மற்ற பொருள்களை மிச்சப்படுத்தலாம் என்ற